## தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகளில் உள்ள

# அருஞ்சொற் பொருட்குறிப்பு

Director of Ar...
Madras

சா. கணேசன்

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு
சென்னை

**Office of the**
**Director of Archaeology**
**Madras** 2597 E

# முன்னுரை

தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலுள்ள இராஜ ராஜனின் கல்வெட்டுகள் முதல் பகுதியாக இத்துறை யால் வெளியிடப்பட்டுள்ளது. மற்றய கல்வெட்டுகள் இரண்டாம் பகுதியாக வெளிவரும். கல்வெட்டுகள் அனைத்திற்குமே அருஞ்சொல் பொருள் விளக்கம் தேவை. ஆயினும் தஞ்சை பெருவுடையார் கல்வெட்டு கள் முதற் பகுதிக்கு மட்டும் இப்பொழுது அருஞ்சொல்-பொருள் குறிப்பு முன்பதிப்பாக வெளிவருகிறது. இதுபற்றி அறிஞர்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்க கோருகிறேன். இப்பொருட் குறிப்பை ஒரே நாளில் திரு. சா. கணேசன் அவர்கள் எழுதி உதவியிருக்கிறார் கள். அவர்களுக்கு கல்வெட்டுகளின் மீதுள்ள ஆர்வமும் அவற்றைத் தெளிவாக விளங்க வைக்கும் ஆற்றலும் தமிழுலகம் நன்கு அறியும். அவர்களுக்கு உள்ளங் கனிந்த நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். விரைவில் தமிழ்க் கல்வெட்டுகளின் அருஞ் சொல் பொருள் விளக்கம் வெளிவரும் என்னும் நம்பிக்கையுடன் இதை வெளியிடுகிறேன்.

இயக்குநர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை

**Office of the**
**Director of Archaeology**
**Madras**
2597 E

# அருஞ்சொற்பொருட் குறிப்பு

*[எண் : பக்கமும் வரியும்]*

அக்கம் = அஂகம்; தானியம் *(194-18)*
அக்கன் = தமக்கை *(2-6)*
அக்ரம் = நுனி *(247-20)*
அங்கிதேவர் ஆலயம் = அக்கினிக் கடவுள் வீற்றிருக்கும் சிறு கோயில் *(128-19)*
அடுத்த முறை = அடுத்த வார்சு *(49-9)*
அடுத்து விளக்கின = வரிசைப்படுத்தின *(8-17)*
அடைகுடிகள் = பெறுகின்ற குடிமக்கள் *(162-17)*
அட்டித் திருவடித்தொழுத = வைத்து திருவடியில் வணங்கிய *(10-20)*
அம்பட்டன் = நாவிதன் *(98-8)*
அம்புமுதுங்கறடு = கறடு முரடான-சித்தரத்தை போன்ற முத்து *(15-16)*
அரக்கு = (அகத்துள் செறித்துள்ள) அரக்கு *(12-23)*
அரசி மாணிக்கம் = இராணிச் சிவப்பு *(39-19)*
அர்த்த சம்பத்து = பொருளுடைமை *(101-3)*
அல்லாது விடில் = அற்றவர்கள் ஆனால் *(49-12)*
அறுத்தருளி = கெட்டழியச் செய்து *(1-9)*
அஞ்சடுத்து = ஐந்து வரிசைப்படுத்தி *(11-10)*
அனதேசம் = கண் காணாத இடம் *(49-1)*
அனுவட்டம் = நீண்டுருண்ட முத்து *(13-15)*
ஆகா விசாதி = ஒரு வகை மணி *(38-3)*

ஆரியம் பாடுவார்= சமஸ்கிருதப் பாடல் பாடுவோர் (91-14)

ஆடவல்லான்= நடன மூர்த்தி; இப்பெயரால் உள்ள ஒரு நிறை கல் (2-19)

ஆடு சார்த்தி= ஆட்டைக் குறித்து (162-11)

ஆட்டை வட்டம்= ஆண்டு ஒன்றுக்கு வட்டி (276-6)

ஆட்டை வட்டன்= முழு ஆண்டு தொற்றும் (101-15)

ஆதி பூமி= வேள்விச் சாலை (128-20)

ஆலவிருக்ஷம்= ஆலமரம் (247-24)

ஆளிட்டு= மாற்றான் விட்டுப் பணியாற்றி (49-12)

ஆனை ஆட்கள் தெரு= யானைப் பணியாளர் தெரு (207-13)

ஆனைகடுவார் தெரு= யானைக்குச் சோறு சமைப்பார் தெரு (200-6)

ஆஸநம்= பீடம் (247-7)

இடத்திருவடி நிலை= இடது பாதக்குறடு (42-28)

இரட்டபாடி ஏழரை இலக்கம்= இராட்டிரகூடர் ஆண்ட நாடு. பம்பாய் மாநிலத்தின் தென்பகுதியும், ஹைதராபாத் சமஸ்த்தானத்தின் மேல் பகுதியும் அடங்கிய இந் நாடு ஏழரை லட்சம் பூமி (வேலி, ஏக்கர் போன்ற நில அளவு முற்காலத்தில் "பூமி" என வழங்கிற்று) யை உடையது. (1-12)

இரட்டை= இணைந்த (13-17)

இரண்டாந்தரம்= இரண்டாவது முறை (13-14)

இருமடி சோழன்= இரண்டு முடி, இரண்டு குடை போன்ற இரு மன்னர்க்கும் உரிய திருச்சின்ன மரியாதைக் குரிய சோழன் (பாண்டிய நாட்டை வென்று கொண்டதால்) (1-22)

இலாடமாதேவியார்= இலாட தேச மன்னன் மகள் (210-25)

இலைச் செப்பு= வெற்றிலை வைக்கும் பாத்திரம் (6-11)
இலைசுணி= இலைக்கருக்கு (40-16)
இலைத்தட்டு= இலை போன்று அமைந்த தாம்பாளம் (1015)
இறைஇலி நிலம்= மன்னர்க்குச் செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்குப் பெற்ற விளை நிலம் (130-7)
இறை கட்டின நிலம்= மன்னன் வரி நிர்ணயிக்கப்பட்ட விளை நிலம் (130-8)
ஈசாநமூர்த்தி= வடகிழக்கு மூலைக்குரிய ஈசானன் என்னும் திக்குப்பாலகர் (272-4)
ஈச்சொப்பிக்கை= கை போன்ற, உருவமுள்ள ஈ ஓட்டி (6-29)
ஈழச்சேரி= ஈழவர் சேர்ந்து வாழும் குடியிருப்பு (134-22)
ஈழ மண்டலம்= இலங்கை (1-12)
உசரம்=உயரம் (5-19)
உடன் பிறந்தான்= சகோதரன் (218-15)
உடுக்கை வாசிப்பான்= துடிப்பறை என்னும் தோற்கருவி வாசிக்கிறவன் (49-2)
உடையார்= கிழார்; உரிமையாளர் (2-12)
உள்பட= உள்ளடங்க (36-5)
உத்தரம்= இரு சுவர் அல்லது இரு தூணின் மேல் குறுக்காகப் பொருத்தும் உறுப்பு (Beam) (128-21)
உத்துங்கதுங்கன்= ராஜராஜனின் பட்டப் பெயர் (213-23)
உபபீடத்துக் கண்டப்படை= அடித்தளக் கட்டுமானத்தின் கண்டவரி; (13-3)
உமா பரமேச்வரியார்= உமையம்மை (242-21)
உலகளந்தான்= ராஜராஜன் பெயர்களுள் ஒன்று (216-4)
உவச்சு= கோயிற் பூசை (96-3)

உள்படும்= இசையும்; உள்ளடங்கும் (96-20)
உள்ளரக்கு= உள்ளே செறித்த அரக்கு (23-6)
உள்ளாலை= மதிலுக்குட்பட்ட பகுதி (197-10)
உள்ளிட்டன= உள்ளடங்கியவை (7-8)
உள்ளூர்ப் பண்டாரம்= உள்ளூரில் உள்ள களஞ்சியம் (49-6)
ஊடறுத்துப்போன வாய்க்கால்கள்= ஊர், வயல் முதலியவற்றின் இடையே செல்லும் வாய்க்கால்கள் (130-5)
ஊத்தை அட்டாமல்= கேடு வராமல் (194-12)
ஊரிருக்கை= மக்கள் வாழிடம் (134=21)
ஊருணி குளம்= மக்கள் அருந்தும் நீர்நிலை (145-8)
ஊர் நத்தம்= குடியிருப்புக்குரிய மேட்டுப் பாங்கான நிலம் (130-5)
ஊழி= உலகம் விளங்கும் காலம் (1-14)
எடுப்பிச்ச= கட்டின (2-3)
எழுந்தருளி நின்ற= எழுந்து நிற்கிற (242-13)
எழுந்தருளிவித்த= கோயிலில் வீற்றிருக்கச் செய்த
எறிந்து= பொருதி வென்று (7-7)
ஏற்றின= குடியேறச் செய்த (55-3)
ஓட்டு வட்டில்= இலேசான வட்டமான, குழிந்த, ஒரு பாத்திரம்
ஒப்பன் திருக்கைக்காறை= அப்பன் கை அங்கி (அஸ்தம்) (11-12)
ஒப்பு முத்து= தரமான முத்து (13-15)
ஓரிணை= இணை அல்லது ஒரு ஜோடி (இரண்டு) (11-20)
ஓராட்டை= ஓர் ஆண்டு (101-12)
ஜகதிப் படை= புதை படைக் கற்களின் மேல் எழுப்பபெறும் கல்வரியில், நிலமட்டத்தில் காணும் நன்கு பொளிந்த கல்வரிசை (7-10)

ஸத்யாச்ரயன் = மேலைச்சாளுக்ய நாட்டிலிருந்த மன்னன் இரண்டாம் தைலபன் மகன் (10-19)

ஸுப்பிரமண்ய தேவர் = சுப்பிரமணியக் கடவுள் (245-12)

ஸ்தூபித்தறி = வியாளத்தின் உச்சியில் ஸ்தூபியை நிறுவ நடும் தூண் போன்ற நடுக்கால் (4-3)

கங்கில் = இடைத் தாங்கு கழி (7-18)

கங்கைபாடி = இன்றைய மைசூர் மாநிலத்தின் தென் பகுதியான கங்கர் குல மன்னர்கள் ஆண்ட நாடு (1-10)

கச்சொளம் = ஏதோ ஒருவகைப் பாத்திரம் (268-17)

கடமைக்குச் செலவு பெற = பணிக்கு ஆகுங் செலவு தொகை பெற்றுக் கொள்ள (118-4)

கடவார் = உரிமையுடையவர் (49-9)

கணக்கு = கணக்கெழுதுவோன் (95-8)

கணக்கெழுதுவான் = அன்றாடம் கணக்குப் பதிவு செய்யும் கடமையாள் (101-22)

கணபதியார் = சகல கணங்களுக்கும் தலைவரான விநாயகர் (45-8)

கணி முற்றூட்டு = நூலறிஞன், ஓவியன், சோதிடன் முதலியோர்க்குக் கொடுத்த சர்வமானிய உடைமை நிலம் (130-14)

கண்காணித் தட்டான்மை = பல தட்டார்களை வைத்து வேலை வாங்கும் தொழில் முறை நிபுணத்துவம் (99-7)

கண்டநாண் = அட்டிகை போன்ற கழுத்தணி (36-8)

கபாலம் = மண்டை ஓடு (5-20)

கபோதம் = கபோதவரி (128-20)

கம்மாணசேரி = கம்மாளர் சேர்ந்து வாழிடம் (134-22)

கரணத்தார்= கணக்கர் குழு (202-8)
கர்ண பிராவிருதர்கள்= தலையில் போர்த்தும் சிறிய துணியால் இரு காதுகளையும் மூடிக் கொண்டு காட்சியளிக்கும் குள்ளமான மனிதர்கள் (247-17)
கலசப்பானை= மூக்குள்ள கெண்டி (6-17)
கலசம்= ஸ்தூபி அல்லது செம்பு (4-15)
கலம்= படைக்கலம் (1-9)
கலிங்கம்= தற்பொழுது ஒரிசா என வழங்கும் மாநிலம் (1-11)
கவித்த= வளைந்து உள்ளடக்கிய (243-25)
கழஞ்சு= பழங்காலத்து எடைக்கல், சுமார் $\frac{1}{6}$ அவுன்ஸ்; அல்லது $\frac{5}{12}$ தோலா; அல்லது $1\frac{1}{3}$ வராகனெடை உள்ளது (2-15)
கழனிக்குளம்= வயலுக்குப் பாசனமாகும் ஏரி (131-9)
களம்= பயிரடிக்கும் களம் (143-18)
கள்ளிப்பூ= கள்ளிப் பூப்போன்ற அணி உறுப்பு (39-20)
கறண்டிகைச் செப்பு= மூடியும் சங்கிலியிற் பொருந்திய சுரண்டுகோலும் கொண்ட சுண்ணம்புக் கரண்டகம் (6-9)
கற்கிடை= செங்கல் சுடுமிடம்; கல்லெடுக்கும் வன்பார் (143--27)
கற்றளி= கற்கோயில் (2-3)
கன்னான்= பித்தளை முதலிய உலோகபாத்திரம் செய்வோன் (98-16)
கர்ணி= உரிமை; காணியாட்சி (155-10)
காணிக்கடன் = நில உரிமைக் கடமை அல்லது கட்டணம் (130-8)
காந்தர்வர் = இசைப்புலவர் (92-22)
காந்தர்வத் தெரு= இசைவல்லார்த் தெரு (205-18)

காந்தளூர்ச்சாலை = கேரளத்துக் காந்தளூரில் இருந்த, படைக்கலங்கள் நிரம்பியதும், படைப் பயிற்சி முதலான பல்துறைப் பயிற்சி அளிக்கும் இராணுவக் கல்விச்சாலை (1-9)

கால்மாட்டில் = கால்நடைச் செல்வத்தில் (161-20)

கால்மாற்று = பத்தரை மாற்றுத் தங்கத்தரத்தில் $\frac{1}{4}$ தரக் கூறு (13-8)

காவிதிமை செய்ய = காவிக்கல்கல்லி எடுக்க (97-18)

காளங்கள் = எக்காளம் என்னும் திருச்சின்னங்கள் (7-19)

காளம் = எக்காளம் (260-19)

காளாஞ்சி = தேங்காய் பழம் வைக்கும் பாத்திரம் அல்லது அர்க்கியவட்டை என்னும் பாத்திரம் (5-28)

கானபாடி = இசைப்பாடல் பாடுவோர் (90-11)

கிங்கிணிபெரும் நாண் = இடையில் அணியும் கிண்கிணிச் சரடு (39-20)

கிடாரம் = வாய் அகன்று அடி குறுகிய பாத்திரம் (4-10)

கிம்பிரி முகம் = மகரவாய் (39-21)

கிழக்கடைய = கீழ்த்திசையில் அடுக்கிக் கட்டிய (7-10)

கின்னரர் = முப்பத்து முத்தேவர்களில் இருவரான இவர் பாதி பறவையும், பாதி மானிடமுமாக விளங்குவர். கின்னர மிதுனம் எனப்படுவர் (246-22)

கீழ்க் கணக்கு = உதவிக் கணக்கர் (95-11)

கீழ்ப்புறன் = கிழக்குப் பகுதி (128-20)

குடமலை நாடு = குடகு என வழங்கும் நாடு (1-11)

குடம் = நீர் கொள்ளும் குடம் (6-3)

குடுத்த = கொடுத்த (குடு என்ற சொல்லே கல்வெட்டுக்களில் பரக்கக் காணப்படுகிறது) (2-6)

குடுத்தார் குடுத்த கால் மாட்டில் = கொடையாளர் கொடுத்த கால்

நடைச் செல்வத்
தில் (161-21)

குணவியது= தன்மையுடையது (42-11)
குப்பி= குச்சல் சிவப்பு (38-3)
கும்பத் தகடு= மத்தகத்தில் அணியும் தகடு (46-17)
குரவன்= ஆசாரியன் (216-4)
குருவிந்தம்= மட்டமான சிவப்பு மணி (38-7)
குழல்= ஊதும் வாத்தியம் (7-18)
குளங்கள்= நீர் நிலைகள் (130- )
குளிர்ந்த நீர்= படிகம் போன்ற நிறம் (13-17)
குறங்கறுத்து= இடையில் துண்டித்து (150-7)
குறுமடல்= சிறிய விபூதி மடல் (270-13)
குறுமுத்து= சிறு முத்து (13-16)
குறை போந்து= முற்றுப் பெறுமல் (272-6)
குன்றி= குன்றி மணி; கால் வீசம் வராகனெடை (3-21)
கூற்றம்= நாடு; வட்டம் (தாலுகா போன்ற உட்பிரிவு) (1-25)
கெண்டி= செம்பு (3-25)
கேசாந்தம்= திருமுடிவரை (242-16)
கைதவகை= தாழை முதலியன (203-8)
கைத்தழை= கைவிசிறி (248-6)
கைய்வட்டகை= கை பிடியுள்ள வட்டிகை (270-7)
கொட்டகாரம்= பொக்கிஷம் அல்லது களஞ்சியம் (145-9)
கொட்டி மத்தளம் வாசிப்பான்= கொடு கொட்டி அல்லது சித்த மத்தளம் என்னும் பெரிய மத்தளம் வாசிக்கின்றவன் (49-3)
கொண்ட= கைப் பற்றிய (7-7)
கொம்பிற் கொள்கை= யானைத் தந்தத்தின் பூண் அல்லது

கட்டியத் தடி (46-6)

கொலினமை செய்வார் = இட்டபணி செய்பவர் (98-6)

கொல்லம் = திருவாங்கூர் மேற்குக் கரையில் உள்ள பட்டினத்தைத் தலைநகராகக் கொண்ட ஒரு சிறு நாடு (1-11)

கொள்கை தேவர் = பலி கொள்ளும் மூர்த்தி அல்லது குறிப்பிட்ட ஓர் ஆயுதம் (2-13)

கோமளம் = கோமேதகம் (36-21)

கோமேதகம் = கிச்சிலி வண்ணமுடைய இரத்தினம் (41-18)

சகடை கொட்டி = முரசு கொட்டுவோன் அல்லது கஞ்சத் தாளம் கொட்டுவோன் (96-8)

சக்கத்து = ஒரு வகை முத்து (13-17)

சட்டம் = செப்புக் கம்பிப் பட்டை (12-23)

சட்டுவம் = சட்டி (269-3)

சண்டேச்வரப் பிரசாத தேவர் = அறுபத்து நான்கு மூர்த்திகளுள் சண்டீச அனுக்ரக மூர்த்தி (242-11)

சண்டேசுவரர் = சண்டிகளின் தலைவர் (சண்டி = அறங்காப்பான்) (243-15)

சந்திராதித்தவத் = சந்திர சூரியர் உள்ளவரை (276-16)

சப்பத்தி = தட்டையான முத்து (13-17)

சரடு = ..ர்கயிறு (12-23)

சன்னலியள் = கோலப்பொடி தயாரிப்பவன்; விபூதி தயாரிப்பவன்; அல்லது சுண்ணம்பு நீற்று வடி கட்டித் தருபவன் (97-10)

சார்த்தி அருள = அணிவிக்க (11-9)

சாலாபோகம் = அறச்சாலைகளுக்குரிய நிலம் (142-3)

சாலியத்தெரு = நெசவாளர் தெரு (197-10)

சிரோவர்த்தனை = தலைச்செல்வம் அதாவது ஜடாபாரம் (243-7)

சிவந்த நீர் = செம்மை நிறம் (13-18)
சிவபாத சேகரன் = இராஜராஜனின் பல்பெயருள் ஒன்று (7-17)
சிறகு = பக்கம் (71-6)
சிறுதநம் = சிறுவாட்டுப் பணம் அல்லது கணக்கில் வராத சில்லறை வரவுப் பணம் (3-7)
சிறுதனம் = சொந்தப் பொருள் (90-18)
சிற்றப்பன் = தந்தையின் தம்பி (219-6)
சின்னங்கள் = அடையாளங்கள் (5-26)
சுகந்தி = இளநீலப் பசுமையான ஒரு வகைப் பச்சை (38-3)
சுடர் = திருவாசியின் விளிம்பில் உள்ள சுடர் (271-17)
சுரபி = பசு (கறவைப் பசு) (196-11)
சுருக்கிந தகடு = பொதிந்த தகடு (4-5)
சூலம் = மூவிலை நெடுவேல் (திரிசூல ஆயுதம்) (5-19)
செத்தார் = இறந்தவர் (49-8)
செப்பாணி = செம்பால் ஆன ஆணி (36-4)
செப்புக் குடம் = செம்பால் செய்த ஸ்தூபியாகிய குடம் (4-4)
செப்புத் திருமேனி = செப்புப் படிமம்; செம்பால் வடித்த மூர்த்தி (242-7)
சோனகச் சிடுக்கின் கூடு = யவன நாட்டு மரபில் செய்த பின்னர் கூடு போன்ற ஒரு அணி (40-22)
தச்சாசார்யம் = மரவேலைத் தலைமை ஆசாரியன் அல்லது தலைமைச் சிற்பி (98-18)
தச்சு = மரவேலை செய்யும் தொழிலினர்; அல்லது கல்வேலை செய்பவர் (98-21)
தடவிக் கட்டின = பொதிந்து இறுக்கிய (13-11)
தடிகைபாடி = தற்காலத்து மைசூர் மாநிலத்தில் மைசூர் மாவட்டத்தைக் கொண்ட ஒரு சிறு நாடு (1-10)

தடிமாறும்= கழைக்கூத்தாடும் அல்லது குறை தவிர்க்கு
(96-20)

தட்டம்= தாம்பாளம் (3-28)

தண்டவாணி= பொன் மாற்றுக் கண்டறிய உதவும் உ
ஆணி (13-8)

தண்டு= படையெடுப்பு (1-13)

தண்ணிய= குறைந்த (13-8)

தமருகம்= உடுக்கை அல்லது துடி (5-20)

தமிழ்ப் பாட= தமிழ்ப் பாடல் பாடுதற்கு (91-16)

தய்யான்= தையற்காரன் (98-10)

தலைமாறு= மாற்றான் (49-8)

தலைவாய்ச்சேரி= ஊர்த்தொடக்கத்தில் உள்ள புறவ
சேரி (150-24)

தவளச்சத்ரம் மகுடம்= வெண்குடைக் கிரீடம் (10-10

தளிகை= நைவேத்திய பாத்திரங்கள் (261-16)

தளிச்சேரி= கோயிற்சேரி (55-2)

தளிச்சேரிப் பெண்டுகள் = கோயிலைச் சேர்ந்த பி
பிள்ளைகள்; ஆடல் மகளி
(55-1

தன்னேற்றம்= தன் சார்பினர் (96-5)

தக்ஷிணமேருவிடங்கர்= தஞ்சைப் பெரிய கோயிலிலுள்
உலோகத்தாற் படைத்
சோமாஸ்கந்தர் (விடங்கர் =
உளியால் பொளியப் பெற
மூர்த்தி (11-9)

தக்ஷிணமேருவிடங்கன் என்னுங்காசுகல்= பொன் முதலி
நிறுக்கும் மற்றொ
தரக் கல்லி
பெயர் (12-24)

தக்ஷிணா மூர்த்திகள் = ஆலமர் கடவுள் தெற்கு பார்த்து, சின் முத்திரையுடன் குருமூர்த்த மாக அமர்ந்திருக்கும் சிவன் (246-13)

தாந்தாம் = அவரவர் (49-11)

தாமரைச் செயல் திருப்பொற்பூ = பொன்னால் செய்த தாமரைப்பூ (11-7)

தாமரைத்தாள் வட்டில் = பல துளைகளைக் கொண்ட, தாராபிடேகத்திற்கேற்ற, குழிந்த வட்டில் (6-24)

தானைத் திருப்பட்டிகை = இடுப்பில் அணியும் மணிப்பட்டி (28-28)

திரு = கிரக நிலை கணிப்போன் (97-24)

திருஆபரணங்கள் = நல்லணிகள் (7-8)

திருநந்தவனங்கள் = திருக்கோயிலுக்கு மலரும் தளிரும் விளைக்கின்ற தோட்டங்கள் (140-7)

திருநயநம் = கண் மலர் (46-20)

திருநாமம் = பெரும்பெயர் (7-17)

திருப்பட்டம் = நெற்றிப் பட்டம் (2-20)

திருப்பட்டிகை = அரைப்பட்டம் (Belt) (11-22)

திருப்பதியம் = மூவர் முதலிகளான சம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிய 'தேவாரம்' என வழங்கும் ஏழு திருமுறைகள் (48-20)

திருப்பரிகலங்கள் = மேலான பாத்திரங்கள் (260-6)

திருப்பரிசாரகம் = மடைப்பள்ளித் தொழில் (101-7)

திருப்பள்ளித் தொங்கல் = மகர தோரணம் முதலான எடுபிடிகள் (96-24)

திருப்பள்ளித் தொங்கல் மகுடங்கள் = கிண்கிணி ஆரம் போன்ற தொங்கல்களுடன் கூடிய கிரீடங்கள் (8-17)

திருப்புறக்குடை = முதுகுப்பக்க அங்கி (25-27)
திருப்பொற்பூ = பொன்மலர் (10-21)
திருமகள் = செல்வத்தின் அதிதேவதையான இலக்குமி (1-8)
திருமஞ்சநம் = குளித்தல் (1-22)
திருமஞ்சநசாலை = குளியற்கூடம் (1-22)
திருமஞ்சனக்குளம் = திருக்கோயில் மூர்த்திகளின் அபிஷேகத்திற்கு நீரெடுக்கும் நீர்நிலை (144-15)
திருமஞ்சனத்தார் வேளத்து பெண்டாட்டி = திருமஞ்சனப் பணிபுரியும் மகளிர் (207-24)
திருமடைப்பள்ளிக் குசவர் = மடைப்பள்ளிக்கு வேண்டும் பானை சட்டி வனைந்தளிக்கும் குசவர் (97-12)
திருமந்திரவோலை = அரசனின் அவைக்களத்து அதிகாரி (215-10)
திருமாலை = பொற்பூமாலை (22-18)
திருமுடி = கிரீடம் (6-27)
திருமுற்றங்கள் = சந்நிதிகள் (140-6)
திருமெய்காப்பார் = இறைவன் திருவுருக்காவல் புரிவார் (117-20)
திருமெய்காப்பு = மெய்காவல் பணி செய்வான் (272-12)
திருமேனி = மூர்த்தி; படிவம் (205-27)
திருவடிக்காறை = பாத அங்கி (பாதம்) (11-20)
திருவாய்க்கேழ்வி = மன்னன் வாய்மொழியைக் கேட்டு ஆணை எழுதுவோன் (94-17)
திருவாய்மொழிஞ்ச = வாய்மொழி ஆணையிட்ட (2-8)
திருவாய்மொழிந்தருளின = வாய்மொழிக் கட்டளையிட்ட (49-18)
தீண்டாச்சேரி = தீண்டப்படாதார் சேர்ந்து வாழிடம் (155-10)

துடங்கி= தொடங்கி (128-21)
துடர்= சங்கிலி வளையம் (36-26)
துணையன்= உதவியாளன் (97-24)
தூக்கம்= தொங்கட்டான் (6-21)
தேசு= ஒளி; பெருமை (1-15)
தேவதானமாய் வருகின்ற நிலம்= தேவாலயங்கட்கு அறக்கொடையாய்க் கிடைக்கின்ற நிலம் (435-21)
தொட்கு= கட்டப்பட்டிருக்கும் நீர்த்தொட்டி (150-23)
தொழுதக= வணங்கத்தக்கதாக (1-14)
தோரை= நான்கு விரலிடையுடைய நீட்டல் அளவை (5-16)
தோல் தேய்ந்தன= மேற்பூச்சு மழுங்கிய (26-7)
தோலிடந்தன= தோல் உரிந்தன (257-22)
தைச்ச= பொருத்திய (6-21)
தைப்பு= பதித்தல் (25-22)
தைய்த்த= பதித்த (36-9)
நக்கன்= சிவபிரான்; ஆடல் மகளிர் கோயிற்பணிபுரிவார் தம்மை நக்கன் அடியாள் என்பது மரபு; எனவே தம் பெயருக்கு முன் நக்கன் பெயரைச் சேர்த்துக் கொள்வர் (55-25)
நட்டவஞ்செய்ய= நடனப் பயிற்சி அளிக்க (89-9)
நடுவுரத்நப்பட்டிகை= மத்தியில் சிவப்புப் பதக்கம் (36-24)
நம்பிராட்டியார்= நமது தெய்வப் பெருமாட்டியார்; ஈச்வரியார் (242-20)
நவரத்ந மோதிரம்= சிவப்பு; முத்து; பவளம்; வயிரம்; நீலம்; புஷ்பராகம்; கோமேதகம்; வைடூரியம்; ஆகிய ஒன்பது மணிகள் பதித்த மோதிரம் (41-17)
நன் மருமகன்= நல்ல மாப்பிள்ளை (227-25)

நாண் = சரடு (39-19)
நாவிசஞ்செய்ய = மயிர் வினை புரிய (97-22)
நாளதினலே = மேலே குறிப்பிட்ட நாளில் (2-16)
நிசதம் = நாள்தோறும் (49-4)
நிம்பொளம் = களங்கமற்றது; இளம் பசுமஞ்சள் நிறம் உள்ளது (13-16)
நியாயங்கள் = முறையார் (55-14)
நியாயத்தார் = மன்றத்தார் (49-15)
நிலத்தாறு = நிலத்தின் வழி (150-6)
நிலன் = விளை நிலம் (55-5)
நிலையாய் தீக்ஷித்தார் = தீட்சை பெற்றுள்ள நிரந்தரப் பணியாளர் (101-16)
நிவந்தக்காறர் = அறக்கட்டளை வழி ஊதியம் அல்லது சம்பளம் பெறுவோர் (89-8)
நிவந்தம் = அறக்கட்டளை (49-4)
நிறை = எடை (2-14)
நீக்கி = விடுத்து (7-11)
நீர்கோத்துப் பள்ளவாயாகிக் கிடந்த நிலம் = நீர் நிரம்பி பள்ளமாகத் தரிசு கிடந்த விளைநிலம் (152-15)
நீர்த்தெளியான் = தண்ணீர்த் தெளிப்பவன் (97-8)
நீலம் = நீல ரத்தினம் (36-21)
நுளம்பபாடி = இன்றைய மைசூர் மாநிலத்தின் ஒரு பகுதி யான நுளம்பர்கள் ஆண்ட ஒரு சிறு நாடு (1-10)
நெடுமடல் = பெரிய விபூதி மடல் (270-9)
பங்கு செய்த = கூறிட்ட (55-4)
பங்கு வழி = பாகமுறை (55-4)
பசான் = கதிர் அறுக்கும் பருவம் (276-5)
பசுச்சார்த்தி = பசுவைக் குறித்து (162 9)
பஞ்சதேஹ மூர்த்திகள் = ஐந்துடல் பெருமான் (244-15)

படுகண் = படுகண்ணி என்னும் மாட்டும் வளையம் (காஞ்சிக் கொக்கி) *(39-19)*

படிக்கம் = எச்சிற் படிக்கம் *(4-26)*

படி செலவு பெற = வெளியூர் சென்றால் படி செலவுக்குப் பெற்றுக் கொள்ள *(118-5)*

பணி செய்ய = கடமைபுரிய *(55-10)*

பண்டாரங்கள் = பொக்கிஷம் அல்லது கருவூலங்கள் *(7-14)*

பண்டாரத்துக் கூடி முதலான = பொக்கிஷத்தில் சேர்த்து மூலப் பொருளாக ஆகிவிட்ட *(12-20)*

பண்டாரி = கருவூலப் பொறுப்பாளி; பொக்கிஷதார் *(101-72)*

பதக்கம் = மார்பில் தொங்கும் வட்டவடிவான அணி *(38-10)*

பத்மம் = மேல் நோக்கும் இதழ்களுடன் கூடிய தாமரை மலர் *(242-15)*

பத்மாஸன = தாமரை மலர் போன்ற அகத் தோற்றமுள்ள *(2-16)*

பந்தம் = கட்டு; பிணைப்பு *(28-11)*

பந்துசம்பத்து = இன உடைமை *(101-3)*

பயிட்டம் = ஒரு வகை முத்து *(13-16)*

பரமஸ்வாமி = மகாதேவர் *(5-25)*

பரிவாராலயம் = சுற்றுத் தேவதைகளின் சிறு கோயில்கள் *(45-7)*

பர்வத சிகரம் = மலை முடி *(246-19)*

பர்வதம் = மலை *(246-16)*

பல குழிவு = பல பள்ளங்கள் *(42-11)*

பலம் = வீசையின் $\frac{1}{40}$ நிறை *(4-5)*

பவழகடகம் = பவழத்தால் ஆன கைக்கட்டு *(39-13)*

பவழம்= பவளம் (13-20)
பழமுத்து= பழைய அல்லது முதிர்ந்த முத்து (26-7)
பளிக்கு வயிரம்= பட்டை தீற்றுமல் வேகடம் செய்த வயிரம் (Polished flat diamond) (22-20)
பளிங்கு= படிகம் (13-11)
பள்ளி= முனிவர் உறையிடம்; கல்விச்சாலை (130-14)
பற்ளை= பொட்டு (8-17)
பறைக்குளக்குழி= பறையர் பகுதியில் உள்ள குளம் குட்டை (134-23)
பறைச் சுடுகாடு= பறையர் பிணமெரிக்கும் இடம் (145-10)
பறைச்சேரிநத்தம்= பறையர் சேர்ந்து வாழும் குடியிருப்பு இடம் (145-10)
பன்மையார் தெரு= பல துறையாளர் தெரு (207-15)
பாசமாலை= ஒருவகைக் கழுத்தணி (37-15)
பாசம்= கயிறு (5-20)
பாசுபதமூர்த்திகள்= 'பாசுபதம்' என்னும் கணையை அர்ச்சுனற்கு வழங்கிய சிவபெருமான் (214-17)
பாடவியம்= கருவி வாத்தியம் இசைத்தல் (90-22)
பாண்டி வேளம்= பாண்டிய நாட்டு வேளத்தார் (212-26)
பாதவக்காணி= கோயிலார் கொடுக்கும் உரிமை நிலம் (96-23)
பாதாதி கேஸாந்தம்= அடி முதல் முடிவரை (5-18)
பிங்காளம்= தாம்பாள வகையில் ஒன்று (268-15)
பிஞ்சு= அரும்பு போன்ற சிறுகாய் (12-23)
பிடிச்சருளிந= பிடித்துள்ள (5-19)
பிதா= (சண்டேசரின்) தந்தை (243-18)
பிரபை= ஒளி வட்டம் அல்லது திருவாசி (243-26)

பிரஸாதம் பெறுகின்றூர்= அனுக்கிரகம் பெறுகிறவர் (243-20)

பிருஷ்ட கண்டிகை= பின்னலங்காரத்திற்குரியது. இடையையும் இரு குண்டிகளேயும் பிரித்துக் காட்டி அலங்காரம் செய்வது (42-14)

பிள்ளேயார்= சிவன் மகனுர்; என்றும் குழந்தையாகவே உள்ளவர் (45-8)

பீடம்= ஆசனம் (243-6)

புச்சாதி சிகாந்தம்= வால் முதல் பிடரிவரை (247-18)

புச்சாதிபணுந்தம்= வால்முதல் படம்வரை (247-18)

புறமண்டலம்= சோழமண்டலம் அல்லாத--பாண்டிய சேர மண்டலங்கள் போன்ற-பிற மாநிலங்கள் (130-3)

புறவூர்= பக்கத்து ஊர் (150-7)

புஷ்யராகம்= வயிரத்தைப் போன்ற புஷ்யராக இரத்தினம் (41-18)

பூண்ட= உடைய (1-9)

பூமிசம்பத்து= நில உடைமை (101-2)

பெண்டுகள்= மனேவிகள் (2-6)

பெருந்தரம்= மேனிலே உத்தியோகம் (196-14)

பெருவளவாய்= பெரிய அளவில் நீர் பாயும் வாய்க்கால் (143-19)

பேசி= பூ அரும்பு (36-3)

பேசிக் கல்லில் வெட்டி= கூடிப் பேசி முடிவு கட்டினபடி கல்லில் எழுதி (130-10)

பேரப்பன்= பெரிய தந்தை (220-17)

பேரால்= இனம் ஒன்றுக்கு (97-5)

பொக்கணம்= சோழியப்பை (248-3)

பொத்தி= ஒருவகை ரத்தினம் (13-12)

பொலிசையூட்டு= வட்டி வருமானம் (275-9)

பொன்னின் கொடி= பொன்னாற் செய்த துவஜம் (6-21)
போனார்= சென்றவர் (49-8)
மஞ்சாடி= மஞ்சாடி மரத்து விதை சுமார்; அரை வீசம் வராகனெடை (2-15)
மடல்= விபூதி மடல் (268-12)
மடவிளாகம்= கோவிலைச் சுற்றி உள்ள வீதி (195-19)
மண்டை= மண்டை ஓடு போன்ற உருவமுள்ள பாதமில்லாக் கிண்ணம் (கொட்டாங்கச்சி போன்றது) (3-13)
மரகதம்= பச்சை (36-8)
மரகதம்= பச்சை நிறமுள்ள இரத்தினம் (41-19)
மரக்கால்= எட்டு படி கொண்ட பெய்தல் அல்லது முகத்தல் அளவு கலன் (49-6)
மரத்தின்மேல்பொன் போர்த்தது= மரக்கட்டையின் மேல் முழுதும் தங்கத் தகடு வேய்ந்தது (43-5)
மரத்தின் மேற்பாகம் பொன் போர்த்தது= மரக்கட்டையின் மேற் பக்கம் மட்டும் தங்கத் தகடு வேய்ந்தது (43-23)
மஹாசாகை= பெருங்கிளை; அதாவது அடி மரத்திலிருந்து பிரியும் பணை (247-23)
மஹாதேவர்= பெருந்தெய்வம்; சிவபெருமான் (a43-10)
மஹாவிஷ்ணு= திருமால் (249-12)
மா= இருபதில் ஒரு கூறு (22-20)
மாங்காய் நாண்= மாங்காய் போன்ற உருக்கள் கோத்த சரடு (39-20)
மாட்டில்= செல்வத்தில் (15-12)
மாம்பழமாகச் செய்த தகடு= மாம்பழம் போல செய்த தகடு (46-24)
மாணி= மணமாகாதவன்= (101-7)
மாணிக்கத்தின் தாலி= கெம்பு மணி பதித்த தொங்கும் நாண்

மாணிக்கம்= சிவப்பு; செம்பு (36-8)
மாணிக்க நாளம்= தொளைச் சிவப்பு (257-18)
மாண்= மாணி; பிரமசாரி (102-13)
மாநவட்டில்= புனுகு அல்லது கஸ்தூரிக் சிண்ணம் (5-12)
முசலகன் = முயலகன் (ஆணவத்தின் சின்னம்) (242-18)
முத்திரைச் சங்கு= ஏதோ ஒரு வகைச் சங்க வாத்தியம் (92-4)
முத்தின் உழுத்து= முத்தாலான அணி (40-3)
முத்து வட்டம்= உருள் வடிவுள்ள பெரு முத்து (13-15)
முழத்தால் அளந்து= முழக் கோலால் நீட்டியளந்து (242-8)
முழம்= இருசாண்; முழங்கால் (5-15)
மூக்கு வட்டகை= மூக்குடன் கூடிய வட்டப் பாத்திரம் (266-19)
மூலரத்ந பண்டாரத்தார்= முதலாக உள்ள இரத்தினங்களைப் பேணிக்காக்கும் பொக்கிஷத்தார் (15-12)
மூழல்= மூடி (6-9)
மொட்டு= பிஞ்சு; அரும்பு (8-17)
மோதிரம்= விரலணி போன்ற வளையங்கள் (7-18)
வங்கியம்= குழல் (மேளம்) புல்லாங்குழல் போன்ற துளைக் கருவிகளின் பொதுப் பெயர் (90-15)
வடுகக் காவலர்= வைராவி; அதாவது உயிரைக் கொடுத்துக் காவல் புரிவோர் (90-18)
வண்ணத்தார்= கோயிலில் சுண்ணும்பு, காவி, மஞ்சற் காவி அடிப்பவர்கள் (97-16)
வண்ணிகைத் திருக்கொற்றக் குடை= பல நிறங்களுடன் கூடிய நல்ல வெற்றிக் குடை (10-12)

வண்ணரச்சேரி = வண்ணர் சேர்ந்து வாழிடம் (134-22)
வயிர உழுத்து = வயிரத்தாலான அணி (40-19)
வயிரம் = வச்சிர ரத்தினம் (36-9)
வரை = ஒரு வகைக் கல் (40-5)
வலங்கை வேளைக்காறர் = காலந்தவறாது பணியாற்றும் வீர மைந்தர் (92-24)
வர்க்கத்தார் = மரபினர்; சந்ததியார் (162-20)
வலத்திருவடி நிலை = வலது பாதக்குறடு (42-25)
வளையில் = வளையல் (15-16)
வாங்கி = பொறித்து (7-18)
விண்ணப்பஞ் செய்ய = ஓத (48-21)
விமானம் = கோவிலின் கோட்டப்புறச் சுவர் (2-7)
வியாபாரி = வாணிகன் (213-23)
விரலே = விரல் அளவும் (விரல் முழத்தின் $\frac{1}{16}$ கூறு) (242-9)
விழுந்து கிடந்தார் = கால் வெட்டுண்டு நிற்க மாட்டாமையால் விழுந்து கிடந்தவர் (243-17)
வீரபட்டம் = வீரர்க்குரிய நெற்றிப் பட்டம் (28-6)
வெட்டிந = எழுத்துப் பொறித்த (2-9)
வெள்ளான் சுடுகாடு = உழவர் பிணமெரிக்குமிடம் (145-9)
வெள்ளான் வகை = பயிர் செய்யும் முறை (142-3)
வேங்கை நாடு = கோதாவரி கிருஷ்ணா மாவட்டங்கள் அடங்கிய நாடு (1-10)
வைடூர்யம் = பூனைக் கண் போல உள்ள இரத்தினம் (41-19)
வேலி = சுமார் $6\frac{3}{4}$ ஏக்கர் அளவுள்ள நிலம் (55-5)
வேளம் = காவலிடம்; நம்பிக்கைக் குரிய காவற் பணி (167-12)

ஸ்ரீகார்யம்= திருக்கோயில் நிர்வாகத் தலைமை (45-18)
ஸ்ரீகோயில்= தேவாலயங்கள் (130-5)
ஸ்ரீசந்தம்= அணிவகையுள் ஒன்று (23-4)
ஸ்ரீபண்டாரம்= கோயிற் கருவூலம் (101-6)
ஸ்ரீபலி எழுந்தருளும் = திருப்பலி கொள்ளும் காலத்து புறப்படுகிற (2-12)
ஸ்ரீபலித்தாலம்= தேங்காய், பழம் முதலிய பலிப்பொருள் வைக்கும் தாம்பாளம் (2-16)
ஸ்ரீபாதபீடம்= திருவடி ஆசனம்; திருவடிதாங்கி (5-16)
ஸ்ரீபாத புஷ்பம்= திருவடியில் மலர்போல அர்ப்பணிப்பது (10-19)
ஸ்ரீபாதம்= திருவடி (242-14)
ஸ்ரீபாஹுவலயம்= வாகுவலயம் என்னும் தோளணி (37-28)
ஸ்ரீமுடி= திருமுடி; கிரீடம் (22-4)
ஸ்ரீவாஸுதேவர் = திருமால்; சிறப்பாக கண்ணன் (271-11)
ஸ்ரீஹஸ்தம்= திருக்கை (5-19)
ரத்நகடகம்= பலவகை இரத்தினங்கள் பதித்த கையணி (39-7)
ரத்நங்கள்= சிவப்பு வயிரம் முதலான நவரத்தினங்கள் (12-10)
ரத்ந மோதிரம்= சிவப்பு மோதிரம் (40-18)
ரத்நவளை= சிவப்பு கல் பதித்த வளையல் (38-13)
ரத்நநியாசம்= இரத்தினக்கல் பதித்தல் (242-13)
ரத்நத்தய்யான்= கல்பதித்து நகை செய்யும் தட்டான் (98-14)
ராஜகேஸரி= அரசகேசரி என்னும் பெயருடைய பெய்தல் அளவை (49-5)
ராஜாவர்த்தம்= அரச இரத்தினம் (41-11)
ரிஷிகள்= முனிவர்கள் (247-50)

*லசுநி* = இலேசுனி (42-11)
*ஹளஹளம்* = ஏதோ ஒரு இரத்தினக் கல் (37-26)
*க்ஷேத்ரபாலதேவர்* = வடுகன் என்னும் வைரவன்; ஊர்க் காவலன் எனவும் பெயருண்டு (5-17)

---

**Office of the**
**Director of Archaeology**
**Madras**